**தலைப்பு 114 – போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 114 – போக்குவரத்து மற்றும் விசில் விமான சேவைகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 28 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சுக்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 49,919.19 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 35,006.40 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 14,912.79 மில்லியன் அதாவது 29.87 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 17,910.42 | 17,238.45 | 671.97 | 3.75 |
| மூலதனம் | 32,008.77 | 17,767.95 | 14,240.82 | 44.49 |
| மொத்தம் | **49,919.19** | **35,006.40** | **14,912.79** | **29.87** |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

அமைச்சினால் 2016 ஆண்டிற்கான இலக்கம் 20.03.02.08 கொண்ட வருமானக் குறியீடு ஒன்றிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 7,000.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 6,809.67 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 2.72 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 190.33 மில்லியன் தொகையாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.08 | 7,000.00 | 6,809.67 | 190.33 | 2.72 |

## 2.3. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 11401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 11.00 | 10.99 | 4.70 | 6.65 | 45.00 | 29.12 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழ் பின்வரும் 02 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 635,198 ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்குகளின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
| --- | --- |
| | ரூபா. |
| 6000/0000/00/0013/0112/000 | 520,646 |
| 6000/0000/00/0016/0102/000 | 114,552 |
| | **635,198** |

2.5 **கணக்காய்வு அவதானிப்பு**

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 11 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 56.95 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 31 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் மீதி அச் செலவு விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாடுகளில் 05 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சிலிருந்தது.

**3.2 வருமானக் கணக்குகள்**

அமைச்சுச் செயலாளர் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் அமைச்சின் செயலாளருக்கு ஒதுக்கப்பட்ட எம்பார்கேசன் வரியிடமிருந்து 20.03.09.08 கொண்ட வருமானக் குறியீடு தொடர்பாக வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தல் ஆகிய பொறுப்புக்கள் சாட்டப்பட்டிருந்தது. அவ் வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எம்பார்கேசன் வரியிலிருந்து வருமானத்தை எதிர்கொள்ளலில் வருமானத்தினை கணிப்பிடும் அடிப்படை அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும் இது அதற்கேற்றபடி நடைபெற்றிருக்கவில்லை.

(ஆ) குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம், இலங்கையிலுள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் இலங்கையிலிருந்து வெளிச்சென்ற வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை முறையே 1,333,384 மற்றும் 2,160,519 ஐ உள்ளடக்கி மொத்தம் 3,493,903 தொகையாகும். எனினும், விமான சேவை அதிகார சபையின் தரவின் பிரகாரம், ரிக்கட்டுக்களை பதிந்து வெளிநாடு சென்ற நபர்களின் எண்ணிக்கை 2,994,487 ஆகும். அதனால் குடிவரவு மற்றும் குடியகழ்வு

திணைக்களத்தின் தரவின் பிரகாரம் அறவிட வேண்டிய வருமானம் ரூபா 6,288,422,700 ஆக இருக்க வேண்டியதுடன் 2016 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் மேற்கூறப்பட்ட, வருமானத்தை ஒப்பிடுகையில் ரூபா 6,122,684,400 தொகையிலிருந்ததுடன் எதிர்பார்த்த முரண் ரூபா 165,738,300 ஆகவிருந்தது. அந்த முரண் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 2.64 சதவீதமாகவிருந்தது.

**3.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

விடய இலக்கம் 11401 கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம், அத் திகதியிலுள்ளவாறு நிலுவையாகவுள்ள மீதிகள் ரூபா 1,290,058 தொகையானதுடன் 01 வருடம் தொடக்கம் 17 வருடங்களிற்கு மேலான வீச்சில் நிலுவையாகவுள்ள மீதிகள் இருந்த போதிலும் அத்தகைய நிலுவையாகவுள்ள மீதிகளின் அறவீடு தொடர்பிலான பின்தொடர் நடவடிக்கை மந்தநிலையிலிருந்தது.

**3.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 14 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சானது வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமானது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கிணங்க இருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வு செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் 31 இன் 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2017 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளை 2017 மே 31 திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டியிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பா 29 இன் 07/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவீனம்

தொடர்பாக செலவீனங்களிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாய சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 23 மோட்டார்வாகன விபத்துக்கள் இடம் பெற்ற போதிலும் 12 விபத்துக்களிற்கான ஆரம்ப அறிக்கைகள் மாத்திரம் நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் விபத்துக்கள் நடைபெற்ற திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டது. மீதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் 01 மாதம் தொடக்கம் 15 மாதங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டது.

**3.7 வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையிலான புதிய புகையிரத இணைப்பை நிர்மாணிப்பது மீது செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதனது கடன் உடன்படிக்கை மற்றும் நிர்மாண உடன்படிக்கைகளின் பிரகாரம் அதற்கான மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 36,166 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. அச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 18,915 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 6,461 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டு உதவி செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட ஐக்கிய அமெரிக்க டொலர் 83.46 மில்லியன் ஆரம்ப முற்பணங்கள் முறையாக அறவிடப்பட்டிருக்கவில்லை. அதனால், அமைச்சானது 2016 திசெம்பர் அளவில் சொல்லப்பட்ட தொகையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 29.6 மில்லியன் தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 யூலை 31 அளவில் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அத்திகதியிலுள்ளவாறான நிர்மாணங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 72 சதவீதமாகவிருந்தது. செயற்திட்டத்தின் மீதமாகவுள்ள நிர்மாணங்களிற்காக 2017 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பாலங்களின் 89.3 சதவீத நிர்மாணம், கால்வாய்களின் 98.8 சதவீத நிர்மாணம் மற்றும் மணலின் 70.4 சதவீத அகற்றல் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் 81.7 சதவீதமாகவிருந்தது. இதற்கு மேலதிகமாக, புகையிரத நிலையங்கள் மற்றும் புகையிரத இணைப்புக்களின் நிர்மாணம் அந்த திகதியளவில் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆலோசனை ஒப்பந்தங்களிற்காக ஏற்கப்பட்ட பெறுமதியிலுள்ள சேமிப்புக்கள் 2016 யூலை 31 இல் உள்ளவாறு ரூபா 84.31 மில்லியன் தொகையாகும். 2016 ஓகஸ்ட் 01 இலிருந்து 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக ரூபா 91.36 மில்லியன் பெறுமதியான புதிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தது. அத்தகைய மதிப்பீடுகளில் ரூபா 56.4 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டமொன்று அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்ற மதிப்பீடுகளிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மூல மதிப்பீட்டின் ஆலோசனை ஒப்பந்தமானது ரூபா 68.4 மில்லியன் அல்லது 20 சதவீத ஏற்பாடுகளை நிச்சயமற்ற நிலைக்காக உள்ளடக்கியிருந்ததுடன் அதில் ரூபா 4.28 மில்லியன் தொகை 2016 யூலை 31 அளவில் செலவழிக்கப்பட்டிருந்தது. அத்தகைய சேமிப்புக்களானது குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் ஆலோசனை மேற்பார்வைக்காக ஒதுக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(உ) ஆலோசனை ஒப்பந்த உடன்படிக்கையின் 3.6 ஆம் பிரிவின் பிரகாரம், ஆலோசனைகளின் வடிவமைப்புக்கள் மற்றும் மேற்பார்வைக்காக அனுமதியை கொடுத்தல் முக்கிய தொழிற்பாடாக இருந்தது. இருந்தபோதிலும், உடன்படிக்கைக்கேற்ப வடிவமைப்புகளை அனுமதிக்க தவறுதல், உடன்படிக்கைக்கு

முரணான வடிவமைப்புக்களிற்கான அனுமதிகள், தளத்துடன் இணங்காத வடிவமைப்புகளிற்கான அனுமதிகள், ஆலோசனையின் மேற்பார்வையானது மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்கான தெரிவுப்பட்டியல் (Check List) இவை பராமரிக்காமை மற்றும் பயிற்சியளிக்கப்படாத அலுவலர்கள் மேற்பார்வையில் ஈடுபட்டிருந்தமை போன்ற காரணங்களில் ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 05 சந்தர்ப்பங்களின் திருத்தப்பட வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக, திட்டங்களிலுள்ள குறைபாடுகள் மற்றும் நிர்மாணங்களின் குறைந்த தரம் (Quality) போன்றவற்றால் இத்தகைய நிர்மாணங்கள் சில சந்தர்ப்பங்களில் அகற்ற வேண்டியிருந்தது.

(ஊ) ஆலோசனை ஒப்பந்த கையேட்டின் 3.3 ஆம் பிரிவில் நோக்கங்கள், எல்லைகள், நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை பொறுப்புகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்கு வேலைக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் நிபந்தனைகள் மேற்கூறப்பட்ட பிரிவின் பிரகாரம் இருக்க வேண்டும். எனினும், ஆட்சேர்ப்பு தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) திக்லெல பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் 03 கால்வாய்களினை நிர்மாணத்தலிற்காக மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையில் புகையிரத இணைப்பை நிர்மாணித்தல் மீது ரூபா 71,532,564 தொகை செயற்திட்டத்தல் மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு 2014 திசெம்பர் 02 இல் ரூபா 25,381,059 ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,532,564 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

இந்த 03 கால்வாய்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட இறுதி மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 20,601,569 தொகையாகவிருந்த அதேநேரம் ஒப்பந்த பெறுமதி மற்றும் சான்றுறுதிப்படுத்தபட்ட சிட்டைகளின் பெறுமதி முறையே ரூபா 20,521,448 மற்றும் ரூபா 20,789,064 தொகையாகவிருந்தது. ரூபா 321,548 தொகையான மேலதிக கொடுப்பனவுகளை 03 சந்தர்ப்பங்களில் சான்றுறுதிப்படுத்தல், ரூபா 6,396,427 தொகையான கொடுப்பனவுகளிற்கான கணக்காய்விற்கான சான்றுகளின்மை, ரூபா 2,498,052 மொத்தமான எதிர்மறை முரண்கள் 07 சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றமை போன்றவையானது. இந்த 03 கால்வாய் தொடர்பில் 2017 ஆகஸ்ட் 07 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது.

## 3.8 உள்நாட்டு நிதியளித்தலின் கீழ் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

05 செயற்திட்டங்களானது புதிய புகையிரத இணைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களாக இனங்காணப்பட்டிருந்தது. அதற்கான காலப்பகுதிக்கு மேலாக வருடாந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 05 செயற்திட்டங்களிற்காக ரூபா 41 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் 04 செயற்திட்டங்களிற்காக ரூபா 31 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத்தகைய செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.9 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டால் அமைச்சிற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளில் சேமிப்புக்களானது 24 சதவீதம் தொடக்கம் 88 சதவீதம் வரையிலான வீச்சிலிருந்தது. அதனால், மூலதன ஏற்பாடுகளை அமைச்சால் வினைத்திறான பயன்படுத்தல் தொடர்பான செயன்முறையானது சந்தேகத்திற்குரியதாகவிருந்தது.

(ஆ) மாத்தளை - வெலியாவற்ற புகையிரத இணைப்பு தொடர்பான செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 18,915 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 6,461 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால், மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புகள் ரூபா 121,454 மில்லியன் தொகையாக அல்லது 66 சதவீதமாகவிருந்தது.

**3.10 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகவுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளபடியான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக ் கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 39 | 27 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 130 | 97 | 33 |
| (iv) | ஆரம்ப நிலை | 83 | 48 | 35 |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | 01 | 01 |
| | **மொத்தம்** | **259** | **178** | **81** |

**(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட மனித வளங்கள்**

அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்து அமைச்சால் பெறப்பட்ட மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ஊழியர்களின் வகைப்படுத்தல் | எண்ணிக்கை | ஏனைய தரப்பு |
|---|---|---|---|
| (i) | கணனி செயற்பாட்டாளர் | 02 | இலங்கை போக்குவரத்து சபை |
| (ii) | சாரதி | 11 | இலங்கை போக்குவரத்து சபை |
| (iii) | ஏனையவைகள் | 05 | இலங்கை போக்குவரத்து சபை |
| (iv) | அலுவலக உதவியாளர்கள் | 11 | இலங்கை புகையிரத திணைக்களம் |
| (v) | தொழில்நுட்ப உதவியாளர் | 09 | இலங்கை புகையிரத திணைக்களம |
| (vi) | அமைய உதவியாளர் | 09 | இலங்கை புகையிரத திணைக்களம |
| (vii) | சாரதிகள் | 03 | இலங்கை புகையிரத திணைக்களம |
| (viii) | ஏனையவைகள் | 05 | இலங்கை புகையிரத திணைக்களம |
| (ix) | அலுவலக உதவியாளர் | 03 | சுகாதார அமைச்சு |
| (x) | சாரதி | 02 | சுகாதார அமைச்சு |